# நான் அகமகிழ்வேன்

நான் அகமகிழ்வேன் என்றும் ஆர்ப்பரிப்பேன்
என் வானக தந்தையிலே
அவரை நினைப்பேன் நன்றியால் துதிப்பேன்
எந்த நாளும் என் சிந்தையிலே
உள்ளம் உருகிடுமே கண்ணீர் பெருகிடுமே
அவர் கருணையை நினைக்கையிலே
என்ன சுகம் ஏது பயம் - அவர்
வலது புயம் என்றும் தரும் அபயம்

**1**
உன்னை விட்டு நான் விலகுவதில்லை
உன்னை நாமே கை விடுவதுமில்லை
உன்னோடு நாமே இருக்கின்றோம்
நீ என்றும் எனக்கே தான் சொந்தம்
சொல்வதென் இறைவன் காப்பதென் தலைவன்
அவர் குரல் கேட்பேன் திருவுளம் ஏற்பேன்
அவர் வழி தினம் நடப்பேன்

**2**
பாவச் சேற்றில் நின்றெனைத் தூக்கினார்
பரமன் யேசு எந்தன் பாவம் போக்கினார்
தனிமையில் நின்றேன் துணையாகினார்
பிணியினால் நொந்தேன் சுகமாக்கினார்
ஆறுதல் அளித்தார் ஆவியால் நிறைத்தார்
அவர் குரல் கேட்பேன் திருவுளம் ஏற்பேன்
அவர் வழி தினம் நடப்பேன்